கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

விலைமனுக்களுக்கான அழைப்பு

IWWRMP

ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம் (IWWRMP)

Project No: P166865, Loan No: IDA-66190-LK/IDA-66210-LK

1. ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் (IWWRMP) செலவை நோக்கி சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் (உலக வங்கி) இருந்து நிதிக்காக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் விண்ணப்பித்திருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்தின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் திட்ட பெறுகைக் குழு, தலைவரின் சார்பில் அட்டவணை 01 இல் தரப்பட்டுள்ளவாறு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து IWWRM திட்டத்தின் திட்டப் பணிப்பாளரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

அட்டவணை 01

வேலை விபரம்	தேவையான அனுபவம்/ தகைமை	விலைமனு பிணை செல்லுபடிக் காலம்
Test Pumping Unit மற்றும் அதற்குத் தேவையான துணை உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் விநியோகித்தல் – மீள்கேள்விமனு LK-MoMDE-367154-GO-RFB. (விநியோகக் காலம்: 60 நாட்கள்)	• வாடிக்கையாளர் விபரங்கள் மற்றும் சான்றளிக்கப்பட்ட பணிநிறைவறிக்கையுடன் தொடர்புடைய ஆவணங்கள்/ ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். • வெளிநாட்டு நிறுவனங்கள்/ அரச நிறுவனங்களுடனான பணியனுபவம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். • தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் ஏனைய தகைமைகள், பிரிவு 37.2 (விலைமனுதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.	விலைமனு பிணை: ரூபா 447,000.00 செல்லுபடி: (147 நாட்கள்) 2027.03.19 வரை
மேல் மகாவலி நீரேந்துப் பிரதேசத்திற்கான தியணைப்பு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் LK-MoMDE-573820-GO-RFB. (விநியோகக் காலம்: 90 நாட்கள்)	I. விலைமனுதாரர் 10 ஆண்டுகளுக்கும் மேலாக இத்தொழிலில் ஈடுபட்டிருப்பதுடன், கடந்த 5 ஆண்டுகளில் குறைந்தபட்சம் 3 ஒத்த தன்மையுடைய திட்டங்களைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். II. வாடிக்கையாளர் விபரங்கள் மற்றும் சான்றளிக்கப்பட்ட பணிநிறைவறிக்கையுடன் தொடர்புடைய ஆவணங்கள்/ ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். III. வெளிநாட்டு நிறுவனங்கள்/ அரச நிறுவனங்களுடனான பணியனுபவம் தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். IV. தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் ஏனைய தகைமைகள், பிரிவு 37.2 (விலைமனுதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.	விலைமனு பிணை: ரூபா 1,110,000.00 செல்லுபடி: (147 நாட்கள்) 2027.03.19 வரை

3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனு ஆவணத்தில் உள்ள தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

4. பரீட்சிப்பதற்காக விலைமனு ஆவணங்கள் https://www.iwwrmp.lk/web/procurement/section/procurement-notices என்ற இணையதளத்தில் குறிப்புக்காக கிடைக்கப்பெறும்.

5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் கொழும்பு 07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, இல. 96, மகாவலி மத்திய கட்டிடம், 2ஆவது மாடி, IWWRM திட்ட, சிரேஷ்ட திட்ட நிபுணரிடம் (பெறுகை மற்றும் ஒப்பந்தங்கள்) இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு முன் அறிவித்தல் வேலை நாட்களில் மேல் தரப்பட்டுள்ள அதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும். அட்டவணை 2 இன்படி (தொடர்பு இல.: 0112691163).

6. எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்கள், நிறுவனத்தின் / அமைப்பின் கடிதத் தலைப்பில் தயாரிக்கப்பட்ட எழுத்துமூலக் கோரிக்கையைத் திட்டப் பணிப்பாளர், IWWRM திட்டம், மகாவலி நிலையக் கட்டிடம், 2ஆம் மாடி, இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை என்ற முகவரிக்கு அனுப்புவதன் மூலம், வேலை நாட்களில் மட்டும் முன்கூட்டிய அறிவித்தலுடன் (தொடர்பு இலக்கம்: 011-2691163) விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்காக, மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு விலைமனு ஆவணத் தொகுதிக்கும் மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்கு அட்டவணை 02 ஐப் பார்க்கவும்) பணமாகச் செலுத்த வேண்டும் அல்லது மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை ஒருங்கிணைந்த நீரேந்துப் பிரதேச மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் இலங்கை வங்கியின் ஹைட் பார்க் கிளையில் உள்ள 7042633 என்ற வங்கிக் கணக்கில் செலுத்தி, அதற்கான வங்கிக் கட்டணச் சீட்டின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியுடன் எழுத்துமூலக் கோரிக்கையை iwwrmp@sltnet.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவதன் மூலமும் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

7. விலைமனுவுக்கு முத்திய சந்திப்பு மற்றும் தளத்தைப் பார்வையிடல் அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, PMU மாநாட்டு அறை, IWWRMP, மகாவலி நிலையக் கட்டிடம், 2ஆம் மாடி, இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரியில் நடைபெறும். விலைமனுதாரர்கள், தொடர்புடைய அதிகாரியின் உதவியுடன் உரிய தளங்களைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அட்டவணை 02

ஒப்பந்த இலக்கம்	மீளளிக்கப் படாத வைப்பு	தகவல் மற்றும் விலைமனு ஆவணக் கோரிக்கை	விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு	விலைமனு முடிவு மற்றும் திறப்பது (திகதி மற்றும் நேரம்)
LK-MoMDE-367154-GO-RFB.	ரூபா 8,000.00	26.10.2026 தொடக்கம் 05.11.2026 வரை 9.30 மணி தொடக்கம் 15.00 மணி வரை	திகதி: 02.11.2026 நேரம்: மு.ப. 10.30	திகதி: 06.11.2026 நேரம்: பி.ப. 2.00
LK-MoMDE-573820-GO-RFB.	ரூபா 18,000.00	26.10.2026 தொடக்கம் 05.11.2026 வரை 9.30 மணி தொடக்கம் 15.00 மணி வரை	திகதி:02.11.2026 நேரம்: மு.ப. 12.30	திகதி: 06.11.2026 நேரம்: பி.ப. 3.00

8. விலைமனு ஆவணங்களின் அனைத்துப் பக்கங்களிலும் விலைமனுதாரர் கையெழுத்திட்டு தமது முத்திரையை இடுதல் வேண்டும்.

9. இரு பிரதிகளுடனான முழுமையான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுவைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கத்தை தெளிவாகக் குறிப்பிட்டு அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டவாறு திட்டப் பணிப்பாளர், IWWRM திட்டம், 2ஆவது மாடி, மகாவலி மத்திய கட்டிடம், இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் சேர்த்தல் அல்லது விரைதூதர் மூலம் அனுப்புதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இரண்டுக்கு (02) மேற்படாத எண்ணிக்கையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.

திட்டப் பணிப்பாளர்,
ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம்
2ஆவது மாடி, மகாவலி மத்திய கட்டிடம்,
இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்
2026.10.23